Literacy for a Billion

Movie: Kovil
Year: 2003

Song: Collegekku
Lyricist: Snehan

காலேஜுக்கு போவோம்
கட்டடிக்க மாட்டோம்
வாத்தியாரை நீயே
கேளு முருகா
கோயிலுக்கு வருவோம்
சைட்டடிக்க மாட்டோம்
பொண்ணுங்களை நீயே
கேளு முருகா
மயில் ஏறி போய்
நீ வள்ளியத்தான் பார்த்தே
சைக்கிள் ஏறி
தேடி வந்தோம்
உன்னைத்தானே நாங்க
பூமியத்தான் சுத்தி
நீ ஞானப்பழம் கேட்டே
படிச்சு படிச்சு கிழிச்சு போட்ட
ஞானப்பழம் நாங்க நாங்க
காலேஜுக்கு போவோம்
கட்டடிக்க மாட்டோம்
காலேஜுக்கு போவோம்
கட்டடிக்க மாட்டோம்
வாத்தியாரை நீயே
கேளு முருகா
கோயிலுக்கு வருவோம்
சைட்டடிக்க மாட்டோம்
பொண்ணுங்களை நீயே
கேளு முருகா

புஸ்தக மூட்டை தூக்கித்தான்
ஸ்கூல் நாங்கள் அலைஞ்சோமே
ஒத்தை நோட்டுலே
இனி பாடம் முடிப்போம்
பலமுறை லீவ்லெட்டருலே
பாட்டியை நாங்க கொன்னோமே
விடுமுறையே

இனி தேவையில்லே
யூனிபார்ம் போடும்

தொல்லை இல்லை
சோத்துமூட்டை தூக்க
தேவை இல்லை
அடங்கொக்கா
அட மக்கா
உப்பு கடலை
வாங்கி திம்போம்
தப்பா கடலை
போடமாட்டோம்
காலேஜுக்கு போவோம்
கட்டடிக்க மாட்டோம்
வாத்தியாரை நீயே
கேளு முருகா
கோயிலுக்கு வருவோம்
சைட்டடிக்க மாட்டோம்
பொண்ணுங்களை நீயே
கேளு முருகா

காளை மாடு கறந்தாலும்
குதிரை முட்டை போட்டாலும்
கெமிஸ்டிரியை நாங்கள்
எடுக்க மாட்டோம்
கணக்கு மாஸ்டர் கவுத்தாலும்
நூத்துக்கு முட்டை போட்டாலும்
கோழியென்று நாங்கள்
திட்டவே மாட்டோம்
தமிழய்யா வந்து
பாடம் சொன்னால்
இலக்கணம் நாங்கள்
மீறமாட்டோம்
அடங்கொய்யா
அடங்கய்யா

நாகர்கோவில் ஜில்லாவிலே
நாங்க ரொம்ப நல்ல பிள்ளை
காலேஜுக்கு போவோம்
கட்டடிக்க மாட்டோம்
வாத்தியாரை நீயே
கேளு முருகா
கோயிலுக்கு வருவோம்
சைட்டடிக்க மாட்டோம்
பொண்ணுங்களை நீயே
கேளு முருகா
மயில் ஏறி போய்
நீ வள்ளியத்தான் பார்த்தே
சைக்கிள் ஏறி
தேடி வந்தோம்
உன்னைத்தானே நாங்க
பூமியத்தான் சுத்தி
நீ ஞானப்பழம் கேட்டே
படிச்சு படிச்சு கிழிச்சு போட்ட
ஞானப்பழம் நாங்க நாங்க
ஓஹோ ஹோ ஹோ
ஓஹோ ஹோ ஹோ
ஓஹோ ஹோ ஹோ
ஓஹோ ஹோ ஹோ

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*